(இ) அதில் விவசாயத்திற்கு லாயக்காக உள்ள நிலம் எவ்வளவு ?

(உ) அதை விவசாயத்திற்குப் பயன்படுத்த எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

(எ) அதில் இதுவரை விவசாயத்திற்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 8,759.03 ஏக்கர்.

(இ) 302.51 ஏக்கர்.

(உ) இந்த 302.51 ஏக்கர் பரப்பளவு முன்னமேயே சிவோஜமா சுவாதீனத்தில் இருக்கிறது.

(எ) 96.03 ஏக்கர்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அந்த கழுவெளியில் உள்ள மிச்ச நிலங்களை பாண்டிச்சேரிக்கு சொந்தமான அரவிந்த கோஷ் ஆசிரமத்திற்கு கூட்டு ஸ்தாபனத்திற்காக நூறு ஆண்டு அடமானத்திற்காக கேட்டிருப்பதாக கலெக்டர் அவர்களுக்கு மனுக் கொடுத்திருப்பதாக அறிகிறோம். அது பரிசிலனையில் இருப்பதாக அறிகிறோம். எங்களுக்குள்ள கவலையெல்லாம் . . .

கனம் சபாநாயகர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அப்படி அடமானம் செய்து கொடுக்க இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தடுக்க என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் கொடுத்த விவரத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள களர் நிலம்

* 158 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் களர் நிலம் இருக்கிறது ?

(இ) அவைகளை உயர் நிலமாக்க விவசாயத்துறையினர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சுமார் 45 சதவீத நிலங்கள் பல்வேறு நிலைமைகளில் உவர் எறியும், களர்பூத்தும் உள்ளன. இந்நிலங்களில் 2 சதவீதம் (சுமார் 12 ஆயிரம் ஏக்கர்) பயிர் செய்வதற்கு முற்றிலும் உதவாதபடி உவரும், களரும் பாய்ந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

(இ) உவராகவும், களராகவும், சதுப்பாகவும் உள்ள நிலப் பகுதிகளை மீட்பதில் குடியானவர்களுக்கு ஆர்வமூட்டுவதற்காக, மண்ணைப் பயன்படுத்துவதற்கான களிக்கல் (Gypsum)

6th August 1966]

போன்ற பொருள்களை ரயிலில் ஏற்றிச் செல்வதற்குச் சலுகை அளிப்பது, மண் வளப் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள் மூலம் மண் பரிசோதனை செய்துதர உதவி புரிவது, நில வரியையும் தண்ணீர்த் தீர்வையையும் தள்ளுபடி செய்வது போன்ற சலுகைகளை நமது அரசாங்கமும், இந்திய அரசும் அளித்துள்ளன.

திரு. ஆ. தங்கவேலு: ஒவ்வொரு தாலுகாவிலும் எவ்வளவு உயர்நிலமாக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: ஒவ்வொரு தாலுகாவிலும் என்று இல்லை. கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திண்டிவனம் தாலுகாக்களில் அதிகமாக்கி இருக்கிறார்கள் என்று கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

தீ விபத்துகள்

* 159 கேள்வி.—**திரு. ம. கமலநாதன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஜனவரி முதல், மார்ச்சு 31 முடிய தர்மபுரி, வட ஆர்க்காடு மாவட்டங்களில் எத்தனை தீ விபத்துகள் ஏற்பட்டன?

(இ) அவைகளினால் ஏற்பட்ட ஆட்சேதம், பொருட்சேதம் எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH: (a) During January 1966 to March, 1966 there were 62 fire accidents in Dharmapuri district and 60 fire accidents in North Arcot district.

(b) Five persons lost their lives and the loss of property was estimated at about Rs. 4,33,873.

* 160 கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தீயினால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள புறம்போக்குகளில் உள்ள பனை மரங்களைத் தேவைக்கேற்ற அளவு வெட்டிக்கொள்ள அனுமதிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இதற்கு முன்பு தீயால் பாதிக்கப்பட்ட அரிசனங்களுக்குத் தேவைப்படுகிற, குறைந்தது நாலைந்து பனை மரங்கள், புறம்போக்கு மரங்களை வெட்டிக் கொள்ள அனுமதித்தார்கள். இப்போது தீயால் பாதிக்கப்படுகிற அரிசனங்களுக்கு 30 ரூபாயும், துணி வாங்க 10 ரூபாயும் கொடுக்கிறார்கள். இந்த 30 ரூபாயில் ஒரு மரம்கூட இப்போது வாங்க முடியாது. இதை எந்தக் கணக்கில் வைத்துக் கொடுக்கிறார்கள்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS